# பெருந்தெருக்கள் அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 117 - பெருந்தெருக்கள் அமைச்சு

பெருந்தெருக்கள் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெருந்தெருக்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2010 மார்ச் 16 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டில் சனவரி மார்ச் மாதங்களில் அமைச்சின் நடவடிக்கைகளை முறையான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தது.

### (ஆ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் 2011 மார்ச் 31 ஆந் திகதிவரை பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு/ விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 117 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 11701 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு |

### (இ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (I) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 89,507,920,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின்

இறுதிவரை இதில் ரூபா 84,729,932,409 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சின் தேறிய சேமிப்புக்கள் ரூபா 4,777,987,591 அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 5.33 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **செலவு** | **மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு** | **தேறிய நிதிஏற்பாடு** | **செலவு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| மீண்டெழுபவை | 111,420,000 | 120,910,000 | 115,694,652 | 5,215,348 | 4.3 |
| மூலதனம் | 83,400,900,000 | 89,387,010,000 | 84,614,237,757 | 4,772,772,243 | 5.3 |
| மொத்தம் | 83,512,320,000 | 89,507,920,000 | 84,729,932,409 | 4,777,987,591 | 5.3 |

## (II) பாதீட்டு முரண்

(i) 09 மூலதனச் செலவு விடயங்களின் கீழ் மற்றும் 01 மீண்டெழும் செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 502,625,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 17 மூலதன மற்றும் மீண்டெழும் செலவு விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தில் 50% இற்கு மேற்பட்ட சேமிப்புக்களின் பெறுமதி ரூபா 838,120,396 என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) ஒப்பந்தங்களை வழங்குதல் உரிய காலத்தில் இடம்பெறாமை, ஒப்பந்தங்கள் வழங்கப்படாமை என்பவற்றின் காரணமாக 03 செலவு விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 83,600,000 தொகையில் ரூபா 18,008,954 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தக்காரரின் மெதுவான செயல் நடவடிக்கையின் காரணமாக உரிய இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமையினால் 04 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 669,500,000 தொகையில் ரூபா 577,362,920 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0/0/3/253 ஆம் இலக்க பொதுவைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 53,984,771 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளுக்கு குறைய | 2 ஆண்டுகளுக்கு மேல் 3 ஆண்டுகளுக்கு குறைய | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 37,754 | 53,947,017 | 53,984,771 |

மேலுள்ள மீதியில் நிதிப் பிரமாணம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட வைப்புக்களின் மிதிகள் ரூபா 1,570,362 கூட்டுமொத்தமாக இருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு**

(அ) எல்லைகளைப் பின்பற்றல்

அமைச்சிற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றம் விதித்த எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| நிறுவனம் | விடய இலக்கம் | உச்ச செலவு எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடி யானவை | உச்ச வரவு எல்லை | உள்ளபடி யானவை |
|---|---|---|---|---|---|---|---|
| பெருந்தெருக்கள் அமைச்சு | 11701 | 5,890,000 | 2,716,161 | 1,900,000 | 3,675,521 | 20,000,000 | 13,566,352 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 50,848 தொகையான கடன் மீதிகளில் அந்த உத்தியோகத்தர்களின் தற்போதைய சேவை நிலையங்களைக் கண்டுகொள்ள முடியாதிருந்தமையால் அறவீடு செய்யமுடியாதிருந்தது. இந்த மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ii) மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவுள்ள ரூபா 50,898 தொகையான மீதியினை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

## 1.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பரீட்சிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| சுற்றுநிருப ஏற்பாடுகள் | | |
| 2006 மார்ச் 18 ஆந் திகதிய CSA/P1/40 ஆம் இலக்க சனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட அரசாங்க செலவுகள் முகாமைத்துவ சுற்றுநிருபம் | 116,000 | முன்னாள் அமைச்சருக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு செயலாளர்களின் எண்ணிக்கை 2 ஆக இருந்த அதேவேளை நியமிக்கப்பட்ட எண்ணிக்கை 3 ஆகும். அந்த ஒருங்கிணைப்பு செயலாளர் தொடர்பாக சம்பளம் செலுத்துதல். |
| 2006 சனவரி 04 ஆந் திகதிய CSA/P1/40 ஆம் இலக்க சனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட கடிதத்தின் 02.1 ஆம் பந்தி | 275,883 | முன்னாள் அமைச்சருக்காக அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக ரூபா 65,406 தொகையான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளும் ரூபா 210,477 தொகையான காப்புறுதிச் செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| - மேற்படி - | 166,294 | முன்னாள் பிரதி அமைச்சருக்கு உரித்தான வாகனங்களிற்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்திற்காக பழுதுபார்த்தல் செலவுகள் மேற்கொள்ளல். |

## 1.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) 2010 ஏப்ரல் 08 ஆந் திகதி சேவையை முடிவுறுத்துக் கொண்ட அமைச்சு பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்களின் ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 2:1 ஆம் பிரிவின் பிரகாரம் மாதத்தின் ஒரு பகுதியினைச் செலுத்துவதற்குப் பதிலாக ஏப்ரல் மாதம் முழுவதும் சேவையாற்றியதாகக் கருதி முழுச் சம்பளமும் செலுத்தியமை காரணமாக ரூபா 226,290 மொத்த தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கொழும்பு - கண்டி அதிவேக வீதிக் செயற்திட்டத்தின் தொடக்க நடவடிக்கை 2003 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அதற்கான வெளிநாட்டு உதவி மானியங்களுக்காக உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படவில்லை. 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 2 மற்றும் 3 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் செயற்திட்டப் பதவியணியினருக்கு உரித்தற்றதாக இருந்தும் 28 நபர்களைக் கொண்ட செயற்திட்டப் பதவியணியினருக்கு 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 9,479,169 தொகையான சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) கொழும்பு - கண்டி அதிவேக செயற்திட்டத்தின் ஒப்பந்தத்திற்காக வேலைக்கு முன்னைய முற்பணங்கள் செலுத்தும் போது அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 20% உச்ச அளவாக செலுத்தமுடியும். என்ற போதிலும் மேற்கூறிய பிரிவிற்கு முரணாக ஒப்பந்தப் பெறுமதியில் 50% இற்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 2,689,732 தொகை வேலைக்கு முன்னைய முற்பணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) வீதிகள் மற்றும் பாலங்கள் செயற்திட்டத்தினை ஆக்கத்திறனாகவும் முறைப்படியாகவும் அமுல்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட ஆலோசகர்களிடமிருந்து எதுவித சேவையையும் பெற்றுக்கொள்ளாது மாதாந்தம் சம்பளமாக ரூபா 40,000 தொகையும் எரிபொருள் படி ரூபா 30,000 தொகையும் ஆக 2010 ஏப்ரல் மாதம் வரை ரூபா 280,000 தொகையும் செலுத்தப்படடிருந்தது. இந்த ஆலோசகருக்கு ஒப்படைக்கப்பட்ட கடமை அல்லது அவரினால் நிறைவேற்றப்பட்ட கடமை எவை என்பது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிப்பதில் தாமதம்

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவுகள்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|
| கொழும்பு - கண்டி மாற்று அதிவேக வீதி நிர்மாண செயற்திட்டம் | 90,750 | 228.76 | தேவையான நிதியினை வழங்குவதிலுள்ள பலவீனங்கள் மற்றும் காணியினை அளவீடு செய்வதில் தாமதம் |

2003 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட கொழும்பு - கண்டி அதிவேக வீதி நிர்மாணத்தினை செயற்படுத்தி ஒப்படைக்கும் செயற்பாடு மலேசியாவிலுள்ள அரசாங்க கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவை அங்கீகாரமானது 2010/17 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 2010 யூலை 17 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டது. 2011 ஒக்டோபர் மாதம் வரை முதலீட்டாளர் ஒருவரினைத் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலாங்கொடை பண்டாரவளை வீதிப் புனரமைப்புச் செயற்திட்டத்திற்கான காணியினைச் சுவீகரித்தல் நடவடிக்கைக்காக மூன்று பிரதேச

செயலகங்களுக்கு 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 20,000 தொகையான முற்பணங்கள் 2010 கணக்காண்டு இறுதிவரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றல்

2010 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதான பணிகள் எதுவும் நிறைவேற்றப்படவோ அல்லது போதியளவில் நிறைவேற்றப்படவோ இல்லாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) பெருந்தெருக்கள் அமைச்சு செயலாளரின் 2009 திசெம்பர் 24 ஆந் திகதிய MH/MG/03/01/GEN ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களைத் தெரிவு செய்யும் தீர்மானங்களுக்கு முரணாக அரசியல்வாதிகளின் வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்ட 07 வீதிகளின் நிர்மாணிப்பு தொடர்பாக ரூபா 2,928,272 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 02 வீதிகளின் நிர்மாணத்தின் போது நடைபாதை (kerb) உயரம் நியம அளவிற்கு மேற்கொள்ளப்படாதிருந்தும் அதற்காக ரூபா 104,335 செலவு செய்யப்பட்டிருந்தது.

(iii) நிதி இயலுமையினைக் கவனத்தில் கொள்ளாது 25 சனசமூக நிலையங்களுக்கு ரூபா 21,183,642 பெறுமதியான 33 ஒப்பந்தச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(iv) நிறைவேற்றப்படாத நடவடிக்கைகளுக்கான 14 வீதிகள் தொடர்பாக ரூபா 102,724 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(v) மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் வீதிகளை நிர்மாணிக்கும் போது 20 வீதிகள் தொடர்பாக ரூபா 1,219,223 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) மகநெகும வீதிகளை நிர்மாணிப்பது சம்பந்தமாக போதியளவில் மேற்பார்வைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட தரம் | 24 | 16 | 08 |
| (ii) | மூன்றாம் தரம் | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் தரம் | 74 | 31 | 43 |
| (iv) | ஆரம்ப தரம் | 34 | 26 | 08 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | | 134 | 75 | 59 |

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து முறையற்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

| மனிதவளங்களின் எண்ணிக்கை | எந்த நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது | பெற்றுக்கொள்ளப்பட்ட காலம் |
|---|---|---|
| 49 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 12 மாதங்கள் |